بسم الله الرحمن الرحيم

# ஆன்மிக செழுமையும் வாழ்வியல் எளிமையும் நிறைந்த ஆளுமை

# அஷ்ஷைக் எஸ்.எம்.முஸ்தபா மவ்லானா ஜமாலி

எம்.ஏ.ஹபீழ்

இலங்கை, கிழக்கு மாகாணத்தின் மருதமுனையைச் சேர்ந்த அஷ்ஷைக் பாசில் எஸ்.எம்.முஸ்தபா மவ்லானா ஜமாலி அவர்கள். மரபு சார்ந்த ஓர் அரிய ஆளுமை. கொள்கை சார்ந்த சமூக மேம்பாட்டைத் தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார். இலங்கை முஸ்லிம் சமூகத்தின் அறிவுத் தளத்தில், அதன் கொள்கை மீள் எழுச்சிக்கு தனது எழுத்தாலும் கற்பித்தல் செயல்பாட்டாலும் பெரும் பங்களிப்பை ஆற்றினார்,

இலங்கை முஸ்லிம் சமூகம் கல்வி, மார்க்கம் போன்ற துறைகளில் முற்போக்கற்ற பொறிமுறைக்குள் சிக்கி இருந்தது. தூய மார்க்கம் சில சடங்குகளுக்குள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. நவீன கல்வியில் ஆர்வமற்றுக் காணப்பட்டது. இந்த மந்த நிலையை மாற்ற வேண்டும் என்பதில் உறுதியாச் செயற்பட்டார்.

ஆசாரமான குடும்பத்தில் பிறந்து, சடங்கு சம்பிரதாய மரபுகள் மலிந்துள்ள சூழலில் வளர்ந்து, புனிதமான இஸ்லாமிய மார்க்கத்தைக் கற்று, விளங்கி அதை எளிய முறையில் புரிய வைப்பதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஓர் எளிமைப் பண்பியல் நிறைந்த ஆளுமையாகக் அஷ்ஷைக் பாசில் எஸ்.எம்.முஸ்தபா மவ்லானா ஜமாலி அவர்களைக் காணமுடிந்தது.

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஏகத்துவ - மத்ரசாக் கல்வி வளர்ச்சியில் நவீன பொறிமுறையை அறிமுகப்படுத்தி, ஆன்மிகம் – உலகியல் ஆகிய இரு துறைக்குமான இணைந்த வழிகாட்டலுக்குரிய ஆழமான பதிவுகளை விட்டுச் சென்றவர்களில், அஷ்ஷைக் பாசில் எஸ்.எம்.முஸ்தபா மவ்லானா ஜமாலி அவர்களுக்கு முக்கிய பங்குள்ளது.

பல நூல்களை எழுதியதோடு, மொழிபெயர்துமுள்ள அவர் சஞ்சிகை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். அத்தோடு அல்குர்ஆனை தமிழில் மொழிபெயர்த்த குழுவில் அங்கம் வகித்தார்.

கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவதோடு, எழுதுவது, படிப்பது, வாசிப்பது கற்பித்தலுக்கான குறிப்புகளைத் தயார் பண்ணுவது போன்ற பல்வேறு அம்சங்களில் இவர் தன்னுடைய நேரத்தை முகாமைத்துவப்படுத்திச் செயற்பட்டார்.

பள்ளியில் தொழுவிக்கவும் ஜும்ஆ உரை நிகழ்த்தவும் மட்டும்தான் ஆலிம்களால் முடியும் என்ற அன்றைய சமூகத்தின் மந்த நிலையை மாற்றி, ஏகத்துவ ஆலிம்களால் உலகக் கல்வியையும் கற்று, இரண்டு துறைகளிலும் ஒரே நேரத்தில் தேர்ச்சி பெற்று, பல்கலைக்கழகம் சென்று, ஆலிமாகவே உயர் பதவிகளை வகிக்க முடியும் என்ற சிந்தனையை மதுரசாக் கல்வியில் புகுத்தி, ஸலபிய்யாக் கலாபீடத்தை ஓர் உயர் நிலைக்குக் கொண்டுவந்தவர்களில் இவரின் வகிபாகம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அத்தகைய ஒரு பன்முக ஆளுமையின் ஆன்மிக செழுமை நிறைந்த, ஆடம்பரமற்ற, எளிமைத் தன்மை நிறைந்த வாழ்வையும் தஃவாப் பணியையும் இவ்வாக்கத்தில் சுருக்கமாக முன்வைக்கின்றேன்.

# ஆன்மிக செழுமையும் வாழ்வியல் எளிமையும் நிறைந்த ஆளுமை

# அஷ்ஷைக் எஸ்.எம்.முஸ்தபா மவ்லானா ஜமாலி

எம்.ஏ.ஹபீழ் ஸலபி

## அறிமுகம்

இலங்கை முஸ்லிம் உம்மத்தின் கல்வி, கலாசார, பண்பாட்டு வளர்ச்சிக்காகவும் ஓரிறைக் கோட்பாட்டு எழுச்சிக்காகவும் ஷிர்க் - பித்அத் மூட நம்பிக்கைகள் ஒழிப்பிற்காகவும் தனது நீண்ட கால வாழ்வை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர், அஷ்ஷைக் பாசில் எஸ்.எம்.முஸ்தபா மவ்லானா ஜமாலி அவர்கள். கொள்கையும் அறிவுணர்வுமிக்க மரபு சார்ந்த சமூக மேம்பாட்டைத் தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார். இலங்கை முஸ்லிம் சமூகத்தின் அறிவுத் தளத்தில், அதன் கொள்கை மீள் எழுச்சிக்கு தனது எழுத்தாலும் கற்பித்தல் செயல்பாட்டாலும் பெரும் பங்களிப்பை ஆற்றினார்,



அன்றைய இலங்கை முஸ்லிம் சமூகம் கல்வி, மார்க்கம் போன்ற துறைகளில் முற்போக்கற்ற பொறிமுறைக்குள் சிக்கி இருந்தது. தூய மார்க்கம் சில சடங்குகளுக்குள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. நவீன கல்வியில் ஆர்வமற்றுக் காணப்பட்டது.

ஆசாரமான குடும்பத்தில் பிறந்து, சடங்கு சம்பிரதாய மரபுகள் மலிந்துள்ள சூழலில் வளர்ந்து, புனிதமான இஸ்லாமிய மார்க்கத்தைக் கற்று, விளங்கி அதை எளிய முறையில் புரிய வைப்பதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஓர் எளிமைப் பண்பியல் நிறைந்த ஆளுமையாகக் காணலாம்.

அந்தவகையில், இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஏகத்துவ - மதுரசாக் கல்வி வளர்ச்சியில் நவீன பொறிமுறையை அறிமுகப்படுத்தி, ஆன்மிகம் – உலகியல் ஆகிய இரு துறைக்குமான இணைந்த வழிகாட்டலுக்குரிய ஆழமான பதிவுகளை விட்டுச் சென்றவர்களில், அஷ்ஷைக் பாசில் எஸ்.எம்.முஸ்தபா மவ்லானா ஜமாலி அவர்களுக்கு முக்கிய பங்குள்ளது.

என்றும் மறக்காத, மறக்க முடியாத ஆசான்களில் இவரும் ஒருவர். ஸலபிகளின் எழுத்தாற்றலில் இவருக்கு முக்கிய பங்குள்ளது. எனது எழுத்தாற்றலிலும் மவ்லானாவின் தாக்கம் உள்ளது. ஸலபிய்யாவின் உப அதிபராக உயர்ந்து, மாணவர்களின் ஆக்கத் திறனை வளர்ப்பதிலும் வாசிப்பார்வத்தை அதிகரிப்பதிலும் பெரும் பங்காற்றினார். மாணவப் பருவ மனநிலைகளை நன்கு அறிந்திருந்த ஓர் உளவியலாளராக அவர் விளங்கினார்.

பள்ளியில் தொழுவிக்கவும் ஜும்ஆ உரை நிகழ்த்தவும் மட்டும்தான் ஆலிம்களால் முடியும் என்ற அன்றைய சமூகத்தின் மந்த நிலையை மாற்றி, ஏகத்துவ ஆலிம்களால் உலகக் கல்வியையும் கற்று, இரண்டு துறைகளிலும் ஒரே நேரத்தில் தேர்ச்சி பெற்று, பல்கலைக்கழகம் சென்று, ஆலிமாகவே உயர் பதவிகளை வகிக்க முடியும் என்ற சிந்தனையை மதுரசாக்

*கல்வியில் புகுத்தி, ஸலபிய்யாக் கலாபீடத்தை ஓர் உயர் நிலைக்குக் கொண்டுவந்தவர்களில் இவரின் வகிபாகம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அத்தகைய ஒரு பன்முக ஆளுமையின் ஆன்மிக செழுமை நிறைந்த, ஆடம்பரமற்ற, எளிமைத் தன்மை நிறைந்த வாழ்வையும் தஃவாப் பணியையும் இவ்வாக்கத்தில் சுருக்கமாக முன்வைக்கின்றேன்.*

## பிறப்பும் இளமையும்

*S.M.முஸ்தபா மவ்லானா அவர்கள் 06.04.1924. ஞாயிறு மு.ப. 8 மணிக்கு மகுமூது மவ்லானா அவர்களுக்கும் முஸ்தபா மவ்லானா பாத்தும்மா (பதிவிலுள்ளபடி) அவர்களுக்கும் மருதமுனை (தற்போது M.S. ஐயூப் J.P. அவர்கள் வீடு இருக்குமிடம்) யில் பிறந்தார்கள். மவ்லானாவின் பாட்டனார் பெயர் செய்யது முஹம்மத். ஈராக்கின் தலைநகர் பக்தாதிலிருந்து மருதமுனையில் குடியேறியவர் என்று கருதப்படும் செய்யது இஸ்மாயீல் இப்னு அப்துல் காதிர் காரீ, ஹாபிஸ், ஹத்தாக், பக்தாதீ (ஊர் மக்களால் "பெரிய மவ்லானா" என அழைக்கப்படுபவர்) இவரது முப்பாட்டனாவார்.*

*ஐந்தாவது வயதில் 25.01.1929 ஆண்டு பாடசாலையில் சேர்க்கப்பட்டார். மவ்லானா அவர்களின் சேர்வு இலக்கம் 857. இவரது பாடசாலை வகுப்பாசிரியர்: ஆ.மு. ஷரீப்தீன் அவர்கள். பாடசாலையில் இணைந்து இரண்டு நாட்கள் கழித்து 27.01.1929 அன்று குர்ஆன் மத்ரஸாவில் சேர்க்கப்பட்டார். அப்போது, அவரது அல்குர்ஆன் மத்ரஸா ஆசிரியர்: S.K.. அப்துர் ரஸ்ஸாக் மௌலானா (S.A.S.. இஸ்மாயில் மௌலானா அதிபர் அவர்களின் தகப்பனார்.)*

*03.05.1948ல் K.S. வைரமுத்து H.M. அவர்களால் வழங்கப்பட்டுள்ள விடுகைப் பத்திரத்திலுள்ளபடி 5ம் வகுப்பில் சித்திபெற்ற பின்னர் 01.03.1935 பாடசாலையிலிருந்து விடுகையாகியுள்ளார்.*

## மதுரசாவும் மார்க்கக் கல்வியும்

*மவ்லானா அவர்களுக்கு மார்க்கக் கல்வியில் ஆர்வமும் ஈடுபாடும் இருந்ததால் 06.04.1935 அன்று மஹரகம கபூரிய்ய அரபு மத்ரஸாவில் சேர்க்கப்பட்டார்.அதிலிருந்து இந்தியா செல்வதற்காக 02.03.1938ல் விலகினார். தமிழ்நாடு, சென்னை ஜமாலிய்யாக் கல்லூரியில் 06.06.1938 ல் சேர்ந்தார். அங்கு கற்றுத் தேர்ந்து, 12.07.1943ல் மவ்லவி ஆலிம் பரீட்சையில் சித்தி பெற்று, ஜமாலி என்ற பட்டம் பெற்றார். 25.04.1945 அன்று மௌலவீ பாஸில் பரீட்சையில் சித்தி பெற்று, பாஸில் என்ற பட்டத்தையும் பெற்றார். தொடர்ந்து உயர் கல்வியில் ஆர்வம் கொண்டிருந்தார்.*

*எனினும், அன்றை இந்திய சூழல் பிரித்தானியாவிற்கு எதிராக சுதந்திரப் போர் நடைபெற்ற காலமாக இருந்தது. அந்த சூழ்நிலை பற்றி அவர் "மௌலவீ பாஸில் சித்தியடைந்து "அப்ஸலுல் உலமா"ப் பரீட்சைக்கு ஒருவருடம் படித்து ஊர் வந்துவிட்டேன். இன்னுமொரு வருடம் படித்திருந்தால், சென்னைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் "அப்ஸலுல் உலமா" சான்றிதழ் கிடைத்திருக்கும். 2ம் உலகப்போர் முடிந்த சமயமாக இருந்ததால் இந்திய சூழ்நிலை மோசமாக இருந்தது. எனவே, ஊர் திரும்பிவிட்டேன்" என்று குறிப்பிடுகிறார்.*

## மணவாழ்வு

*மவ்லானா அவர்கள் 29.12.1955ல் ஷரீபா உம்மா அவர்களை விவாகம் செய்தார்கள். இருவருக்கும் 03 பெண் மக்களும், 01 ஆண் மகனும் உள்ளனர். அபூ ஆதில், அபூ ஆபிஃயா என்ற புனைப்பெயர்களில் எழுதுவார்கள்.*

## கல்விச் சேவை

*மவ்லவி ஆசிரியராக அரசினர் பாடசாலையில் 03.01.1947ல் இணைந்த மவ்லான அவர்கள், கற்பித்தலில் ஆழ்ந்த அனுபவத்தை பெற்றுத் திகழ்ந்தார்கள். அரச பாடசாலையில் அவரது*

*கற்பித்தல் செயற்பாடு, பின்னர் அரபுக் கலாபீடங்களில் கற்பித்தலுக்கு மிகப் பெரிய அனுபவத்தை அவருக்கு வழங்கியிருந்தது.*

## அரசினர் பாடசாலை சேவை

*03.01.1947 - 31.10.1947 காலப்பகுதயில் P / காரைத்தீவு G.M.M.S.யிலும்*
*01.11.1947 - 31.10.1952 வரை திருமலை T/ குட்டிக்கராச்சி G.M.M.S. யிலும்*
*01.10.1952 - 31.12.1956 வரை KG / வரக்காப்பொல G.M.M.S. யிலும்*
*01.01.1957 - 31.12.1959 வரை BT /ஏறாவூர் M.V.யிலும்*
*01.01.1960 - 23.06.1974 வரை KM / மருதமுனை அல்ஹிராவிலும்*
*24.06.1974 - 05.04.1979 வரை KM /மருதமுனை அல்ஹம்ராவிலும் ஆசிரயராகப் பணிபுரிந்து, நீண்ட கால சேவைக்குப் பின்னர், 05.04.1979ல் ஓய்வு பெற்றார்.*

*S.M. ஜலால்தீன் K. ஷாஹுல் ஹமீத் செய்னுலாப்தீன் போன்ற மவ்லவிகளின் தலைமையின் கீழ் நெடுங்காலமாக மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா சபையின் காரியதரிசியாகக் கடமையாற்றியுள்ளார்.*

*அல்குர்ஆன் இறங்கிய ஹிஜ்ரி 1400ம் ஆண்டு உலகளவில் முஸ்லிம்களால் பல மாநாடுகள் நடாத்தப்பட்டன. இது, இலங்கையிலும் கொண்டாடப்பட்ட போது, மருதமுனையில் அல்குர்ஆன் விழா எடுப்பதற்கு அமைக்கப்பட்ட குழுவுக்கு மவ்லானா தலைமை தாங்கினார்.*

## தஃவாவும் சோதனைகளும்

*அல்லாஹ்வுக்கு இணை - துணையில்லை என்ற ஏகத்துவக் கோட்பாட்டை விளங்கிய பின்னர், அக் கொள்கையை பிரசாரம் செய்ய களம் இறங்கினார். கல்முனைக்குடியில் நடைபெறும் கொடியேற்று விழாவை ஒழிப்பதற்குக் கல்முனைக்குடி, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை, மருதமுனை ஆகிய ஊர்களைச் சேர்ந்த உலமாக்களும், வியாபாரிகளும், அறிஞர்களும் 01.01.1976ல் கூட்டப்பட்ட "ஹிமாயத்துல் இஸ்லாம்" என்ற சபைக்குத் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். இச்சபைக்கு ஓய்வுபெற்ற நீதிபதியாகிய M.A.M. ஹுஸைன் அவர்களும், வழக்கறிஞர்களாகிய M.H.M.அஷ்ரப், ஷம்சுத்தீன் ஆகியோர்களும் பூரண ஒத்துழைப்பு நல்கினர் என்று மவ்லான அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.*

*இதன் பயனாக 19.07.1979 அன்று கொடியேற்றவிழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கல்முனைக்குடி பிரதான வீதியில் மாபெரும் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. மவ்லவிகளாகிய மஸ்ஊத் ஆலிம் (ரஹ்), M.J.M.. ரியாழ் (அகில இலங்கை உலமா சபை) போன்றவர்களும் சில அரசியல்வாதிகளும் சமூகமளித்திருந்தனர். ஓர் அரசியல்வாதியின் (M.P) பேச்சினிடையே குழப்பம் ஏற்பட்டு இரவு 11 மணிக்குக் கூட்டம் Police தடியடியின் பின் முடிவுற்றது. இரவு 2 மணிக்கு மிகவும் கஷ்டப்பட்டு மவ்லானா அவர்கள் வீடு போய் சேர்ந்தார்கள்.*

*அன்றைய காலத்தில் மிகப் பெரும் சவாலான பொதுக் கூட்டங்களைவிட அறிவைப் பரத்துவோம், அதன் மூலம் தவ்ஹீத் பிரசாரத்தை முன்னெடுப்போம் என்ற அன்றைய சில உலமாக்களின் ஆலோசனையின் பின் "அல்ஹாமியா அரபுக் கல்லூரி" என்ற பெயருடன் ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமெனத் தீர்மானம் எடுக்கப்பட்டு, ஹிமாயத்துல் இஸ்லாம் சங்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது, டொக்டர் M.L.M. ஜமீல் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.*

*01.12.1979ல் அல்ஹாமியா அரபுக்கல்லூரி ஆரம்பமாகியது. அதன் முதன்மை ஆசிரியராக மவ்லானா அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். 03 மாதங்கள் 01 வாரம் கடமையாற்றிய பின், அச்சேவையிலிருந்து விலகிவிட்டார்கள்.விலகிய காரணத்தை அவர்கள் குறிப்பிடவில்லை.*

## அரபுத் துறை கற்பித்தல்

1979 களில் அரசாங்க ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவரது கவனம் அரபுத்துறைக் கற்பித்தலில் நாட்டம் கொண்டது. அதனால், 01.06.1981ல் குருநாகல் மாவட்டம் பறகஹதெனியவில் அமைந்துள்ள தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யாக் கலாபீடத்தில் சேர்ந்து உப அதிபராகக் கடமையாற்றினார்கள். ஸலபிய்யாவின் களம் அவருக்கு அறிவை வழங்கவும் பெற்றுக் கொள்ளவும் உதவியது. ஸலபிய்யாவின் நூலகம் அவருக்கு மிகவும் பயன் அளித்தது. அன்று, ஏகத்துவ சிந்தனையைத் தெளிவாகக் கற்பிக்கும் ஒரே கலாபீடமாக அவர் தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யாவையே கருதினார். அதனால், நீண்டகாலம் அதிலேயே விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

நவீன உலக ஒழுங்கில் தஃவாக் களத்தில் போராடப் போகும் ஸலபிய்யா மாணவர்களுக்கு அரபுத்துறையும் உலகக் கல்வியும் மிக அவசியம் என்பதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதற்காகப் போராடினார். நவீன கல்வியைப் புகுத்துவதில் வெற்றியும் கண்டார்.

மிகப் பெரும் பங்களிப்பை வழங்கி மாணவர்களின் அன்பையும் ஊர் மக்களின் மரியாதையும் பெற்று, 01.01.1996ல் ஸலபிய்யாவிலிருந்து விடைபெற்றார். மாணவர்களும் ஆசான்களும் அவருக்கு மரியாதைப் பிரியாவிடையளித்தனர்.

ஸலபிய்யாவிலிருந்து விடைபெற்ற அவர் 09.03.1996 தொடக்கம் 06.10.1998 வரை ஓலுவில் பெண்கள் அரபுக் கல்லூரியில் கடமையாற்றினார்.

அதன் பின்னர் 21.10.1998ல் இருந்து மருதமுனை பெண்கள் அரபுக் கல்லூரியை அவரே அமைத்து அதன் அதிபராக கடமையாற்றினார். தளர்ந்த வயதிலும் அவர் தனது கற்பித்தல் நடவடிக்கையில் இடைவிடாது செயற்பட்டார் என்பதற்கு அவரது பணிகள் ஆதாரமாக அமைந்துள்ளன.

## கற்பித்தல் செயற்பாடு

முஸ்தபா மவ்லானா அவர்கள் ஹதீஸ் வரலாறு பாடங்களை விரும்பி கற்பிப்பார் அதில் தான் அதிக ஆர்வம் அவருக்கு இருந்தது. அவரது கற்பித்தலில் உள்ள சிறப்பு அம்சம் என்னவென்றால் அவர் கற்பிக்கும் எல்லா பாடங்களுக்கும் அவராகவே குறிப்புத் தயாரித்து மாணவர்களுக்கு அதை வழங்குவார்.

'ஹதீஸ் பாடங்களில் அரபி வாசகங்களையும் அதன் மொழிபெயர்ப்பையும் அதிலுள்ள பயன்களையும் பட்டியல் படுத்தி அவற்றை மனனமிடுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துவார். இவ்வாறு மனனம் செய்யப்பட்ட அரபு வாசகங்களையும் மொழிபெயர்ப்பையும் குறிப்பிட்டு ஜும்மாவின் பின்னர் மாணவர்களை அதன் பயன்பாடுகளை குறித்து பேச வைத்து பேச்சாற்றலையும் வளர்க்கின்ற ஒரு பங்களிப்பையும் அவர் மேற்கொண்டார்.

அவரது கற்பித்தல் முறை ஆவண படுத்துவதற்கு இலகுவான முறையில் அமைந்து காணப்பட்டது. பரீட்சையில் மாணவர்களைத் தேற்றுவதற்காக சில இலகு வழி முறைகளைக் கையாண்டார். தனது பாடங்களுக்கான பரீட்சையில் கேள்விகளை மிக இலகுவாக அமைப்பார். மாணவர்களை தேர்ச்சி பெறக் கூடிய வகையில் அவரது கற்பித்தல் செயல்பாடும் பரீட்சையும் அமைந்திருக்கும். "மாணவர்களுக்கு புரியும் விதத்தில் இலகுவாக பாடம் நடத்துவது போலவே பரீட்சை வினாக்களையும் இலகுபடுத்தித் தருவார். இதனால் மாணவர்களுக்கு மவ்லானா ஹஸ்ரதை ரொம்ப பிடிக்கும்" என அவரது மாணவர்களான கலாநிதி எம்.எல்.எம்.முபாரக் மதனி, இம்தியாஸ் யூஸுஃப் ஸலபி ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

*பாடசாலை கல்வியுடன் இணைத்தே சன்மார்க்கக் கல்வியை போதிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த அவர், பரீட்சைத் திணைக்களம் கல்வித்திணைக்களம் என்பவற்றில், தாருத் தவ்ஹீத் அரபுக் கலாபீடத்தை தமிழ் மொழி கற்பித்த ரபீக் ஆசிரியருடன் இணைந்து பதிவு செய்வதில் அவர் முக்கிய பங்காற்றினார்.*

*"மாணவர்களை பாடத்திட்டத்தோடு, பொதுவிடயங்களையும் கற்பதற்கு ஆர்வமூட்டுகின்ற செயல்பாடுகளை அவர் அடிக்கடி மேற்கொள்வார்" என எம்.ஏ.எம். யஸீர் ஸலபி (M.Phil) அவர்கள் குறிப்பிடுகின்றார்.*

*அவர் ஒர் உளவியலாளர் என்று அவரது மாணவர்களான கலாநிதி எம்.இஸட்.எம். நபீல் ஸலபி, கலாநிதி முபாரக் மதனி ஆகியோர் என்னிடம் புகழ்ந்து குறிப்பிட்டிருக்கிறார்கள். மாணவர்களுடனான அவரது அணுகுமுறையில் நானும் இதை நன்கு உணர்ந்திருக்கின்றேன்.*

## ***ஹஜ்ஜுக்கான பயணம்***

*1992ம் ஆண்டு புனித ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றினார். மிகவும் முதிர்ந்த வயதில் இக்கடமையை நிறைவேற்றிய அவர், நாட திரும்பிய பின்னர் வகுப்பறைகளில் அந்த அனுபவங்களை மாணவர்களாகிய எங்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். இன்று, ஹஜ் கடமை எந்த சிரமும் அற்றதாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.*

*1992ம் ஆண்டு அவர் புனித ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றத் தயாரான போது, ஸலபிய்யாவின் மைதானத்தில் அவரை புனித மக்கா நகருக்கு வழியனுப்பி வைக்கும் வைபவம் நடைபெற்றது. மாணவர்களும் ஆசான்களும் அவருக்கு வாழத்துக்கள் தெரிவித்து பிரார்த்தித்தனர். செயலர் A.L.கலீல் ரஹ்மான் அவர்கள் பிரியாவிடை உரையை ஆற்றிய பின்னர், மவ்லானா அவர்கள் உரையாற்றினார்கள். அந்த உரையில் உங்கள் அனைவருக்கும் கல்வி வளம் பெருக புனித இல்லத்தில் நான் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பேன் என்று குறிப்பிட்டார்கள்.*

*'ஹஜ்ஜூக்குப் போவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்த போது, மாணவர்களை அழைத்து தன் பயணத்தைப் பற்றி சொன்னார்.அது இரவு நேரம். விடுதிக்கு முன்னாலுள்ள வெளியில் மாணவர்கள் ஒன்று சேர்ந்திருந்தார்கள். தன் ஆசைகளையும் எண்ணங்களையும் வெளியிட்டபோது, குரல் ததும்பிக்கொண்டது.இதைப் பார்த்து மாணவர்களும் கண் கலங்கினர் என இம்தியாஸ் யூசுப் ஸலபி அந்த நினைவுகளைப் பகிர்ந்து கொள்கின்றார்.*

## ***எழுத்துப் பணிகள்***

*எழுத்துத் துறையில் அவரது பங்களிப்பு முக்கியமாக பேசப்பட வேண்டியது. மூட நம்பிக்கைகளை ஒழிப்பதில் அவரது எழுத்துக்கு முக்கிய இடமுண்டு. அதே போல், இலக்கியப் படைப்பாக்கத்திலும் அவர் தனது கவனத்தை குவித்துள்ளார்.*

*இந்தியாவில் அவர் கற்கச் சென்றது, அவரது எழுத்தாற்றலில் தாக்கம் செலுத்தியுள்ளது. முஸ்தபா மவ்லானா அவர்கள் சென்னையில் படித்துக்கொண்டிருக்கும்போதே "தாருல் இஸ்லாம்", "நூருல் இஸ்லாம்", "சைபுல் இஸ்லாம்", "விடுதலை" ஆகிய பத்திரிகைகளில் பல்துறை சார்ந்த இலக்கிய ஆக்கங்களை எழுதிக்கொண்டிருந்தார்.*

*பட்டம் பெற்று இலங்கை வந்த பின்னரும் "தாருல் இஸ்லாம்", "உண்மை உதயம்", "தினபதி", "தினகரன்", "வீரகேசரி" ஆகிய பத்திரிகைகளில் எழுதிக்கொண்டிருந்தார்.*

*இஸ்லாமிய இலக்கியத்தில் மட்டுமல்லாது, தமிழ் கலையாக்க படைப்பிலக்கியத்திலும் தடம்பதித்தார். "சுதந்திரன்" சிறுகதைப்போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றார். அப்போது, அவரது (PHOTO) புகைப் படமும், கதையும் அதில் பிரசுரமாகியதாக் குறிப்பிட்டார்.*

அத்தோடு, அரபியிலிருந்து அரிய பல நூல்களை தமிழில் தந்தார். அதேபோல், அவர் ஆய்வு செய்து பல நூல்களையும் எழுதினார். தாபியீன்கள் வரலாற்றை தமிழில் தந்ததில் அவரே முதன்மையானவர்.

"மவ்லானா ஹஸ்ரத் அதிகம் வாசிப்பவராக இருப்பார்கள். அதுபோல், மொழிபெயர்ப்பு வேலையிலும் ஈடுபடுவார்கள்.அவர்கள் எழுதிய பல நூல்கள் என்னிடம் உண்டு. 'நான் சத்தியக்குரல் பத்திரிகையின் ஆசிரியராக இருக்கும் போது, எனக்கு மூன்று கட்டுரைகள் எழுதித்தந்தார்கள். மவ்லானா கொழும்புக்கு வந்தால், மருதானையில் தான் தங்கியிருப்பார்கள் எனக்கு கோல் பண்ணி வரவழைத்து, அவர் எழுதிய கட்டுரைகளைத் தருவார்கள் .
மவ்லானா மரணிப்பதற்கு இரண்டு வருடத்திற்கு முன் மருதானையிலுள்ள லொட்ஜில் சந்தித்தபோது, அவரது மேசையில் புதிதாக வாங்கிய புத்தகங்கள் இருந்ததை காணமுடிந்தது.கொழும்புக்கு வந்தால், புக்சென்டருக்குச் சென்று புத்தகங்கள் வாங்குவது அவர்களது வழக்கமாகும்.இறுதி வரை வாசிப்பு அவர்களது சுவாசமாக இருந்தது. இன்று அவர்கள் இல்லை அவர் விட்டுச் சென்ற கல்வி சொத்து நிரந்தரமாக இருக்கிறது" என்று முன்னாள் சத்தியக்குரல் ஆசிரியர் இம்தியாஸ் ஸலபி குறிப்பிடுகின்றார்.

## அரபியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவைகள்

1. நம்பிக்கைச் சுடர்கள் (இமாம் பைஹகீ) 1977
2. குகைவாசிகள் (குர்ஆன் விரிவுரை) 1977
3. பத்ரு வீரர்கள் வரலாறு (தொகுப்பு) 1967
4. மரணித்தவர்களுக்குக் குர்ஆன் ஓதுவது பயனளிக்குமா? (மஹ்மூது மஹ்தீ) 1990
5. பித்அத்துகள் ஓர் எச்சரிக்கை (அப்துல்லாஹ் பின்பாஸ் - ரியாத்) 1990
6. தூய துதிச் சொற்கள் (இப்னு தைமிய்யா) 1990
7. பெரும்பாவங்கள் (இப்னு தஹபீ) 1990
8. இறப்பும் அதன் சட்டங்களும் (அல்பானி) 1999
9. முஸ்லிம் மாதர் திரை (அல்பானி 2000 - இதுவரை வெளிவரவில்லை)
10. தௌபாவின் நிபந்தனைகள் (தொகுப்பு) 1971
11. குர்ஆன் ஷரீப் விரிவுரைககளும் தவறுகளும் (தொகுப்பு) 1995

(குர்ஆன் ஷரீப் விரிவுரைககளும் தவறுகளும் அப்போது, இந்தியாவிலிருந்து வெளிவந்த அல்முபீன் மாதச் சஞ்சிகையில் தொடராக வந்து, பின்னர் புத்தகமாக்கப்பட்டது.)

## அவரது நூல்கள்

1. அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் தனித்துவங்கள் நாற்பது.
2. இறுதித் தூதரின் பிரிவுச் செய்திகள்.
3. தாபியீன்கள் வரலாறு
4. ஜோதிமதம் - 1953 (இது அவரது நண்பர் M.M. இப்ராஹீம் அதிபர் அவர்களுடன் இணைந்து, அப்போதைய S.S.C.பரீட்சைக்கான இஸ்லாம் பாடத்திட்டத்திற்கமைவாக மவ்லானா அவர்களால் எழுதப்பட்ட நூல். 03 பதிப்புகள் வந்தன) பின்னர் பாடத்திட்டம் மாற்றப்பட்டுவிட்டதால் அந்த நூல் கிடைக்காமல் போய்விட்டது.)

5. இறைவணக்கம் 1957

6. கல்லரைக் காவலர் 1958

7. நோன்பின் மாண்பு 1959

8. தொழுகை விபரம் (ஷாபியீ- அவரது பெயரில்லாது இப்பொழுதும் வந்துகொண்டிருக்கிறது.)

9. முதற்சம்பவங்கள் 1983

10. அருள் நபியின் அன்பழைப்பு 1952

1984 - 1996 காலப் பகுதியில் ஜம்இய்யத்து அன்ஸாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா வெளியிடும் உண்மை உதயம் முத்திங்கள் இதழின் ஆசிரியராகக் கடமையாற்றினார். அதில், சன்மார்க்க சட்ட விடயங்கள், வரலாறு, அல்குர்ஆன் விரிவுரைகள் போன்ற பல்வேறு துறை சார்ந்த கட்டுரைகளை எழுதினார்.

வெளிவந்து ஒரே நாளில் ஓர் இலட்சம் பிரதிகள் விற்று சாதனை படைத்த ஹிஜாபுல் மர்அத்தில் முஸ்லிமா என்ற அறிஞர் நாஸிருத்தீன் அல்பானி (ரஹ்) அவர்களின் அரபு நூலை, முஸ்லிம் மாதர் திரை என்று எளிய தமிழில் மொழிபெயர்த்தார். பல ஜம்இய்யாகக்ளிடம் அதை வெளியிடுமாறு கோரி படி ஏறி இறங்கி அலைந்தார். ஆனால், யாரும் வெளியிட முன்வரவில்லை.

பெண்கள் முகத்தை மூட வேண்டும் என்பதே ஸவூதி அரேபியாவின் நிலைப்பாடாக இருந்தது. அந்தக் கருத்து சார்பு நிலையில் இருந்த யாரும் அதை வெளியிட முன்வரவில்லை. அதனால், பெண்கள் முகத்தை மூடுவது அவசியமில்லை என்ற அறிஞர் நாஸிருத்தீன் அல்பானி (ரஹ்) அவர்களின் கருத்தை தமிழ் உலகம் அறிவதற்கு முடியாமல் போனது. அந்த நூலை வெளியிட வேண்டும் என்று அவர் எடுத்த எந்த முயற்சியும் இதுவரை நிறைவேறவில்லை. அந்த மொழிபெயர்ப்பு தற்போது எங்கே யாரிடம் உள்ளது என்பது கூட அறியமுடியவில்லை.யாரிடமாவது இருந்தால் தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

ஒரு விடயத்தில் இரண்டு விதமான கருத்துக்கள் தக்க ஆதாரங்களுடன் முன்வைக்கப்படும்போது, அதைப் பரிசீலிக்கும் பக்குவமற்ற ஒரு போக்கு இலங்கை தஃவாக் களத்தில் தொடர்வதையே இந்த நிலை காண்பிக்கிறது. பிரசாரகர்களிடமும் நிருவனங்களிடமும் மாற்றுக் கருத்துக்களை அங்கீகரிக்கும் மன நிலை வளர வேண்டும். மாற்றுக் கருத்துக்களை மனதாற அங்கீகரிக்கும் மனப் பக்குவம் மவ்லானாவிடம் நிறைவாகவே காணப்பட்டது. அதனால்தான் அவர், அறிஞர் நாஸிருத்தீன் அல்பானி (ரஹ்) அவர்களின் நூலை தற்துணிவுடன் மொழிபெயர்த்தார்.

அவர், ஹதீஸ் மேதை அறிஞர் முகம்மது நாஸிருத்தீன் அல்பானி (ரஹ்) அவர்கள் மீது அதிக அன்பு கொண்டிருந்தார். அவரது அஹ்காமுல் ஜனாயிஸ் என்ற நூலை எளிய தமிழில் மொழிபெயர்த்தார். அது அச்சு வாகனம் ஏறியது. தென்னிந்தியாவிலும் வெளியிடப்பட்டது.

### மாணவர்களுடனான நட்புறவு

நீண்ட காலம் அரச பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி, அதிலிருந்து ஓய்வு பெற்று, தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யாவின் ஆசிரியர் குழாமில் இணைந்து, மிகுந்த மரியாதையும் அன்பும் மிக்க ஆசானாகத் திகழ்ந்தார். எந்த சுயநல, வஞ்சக உணர்வும் அற்றவர். அனைவராலும் மவ்லானா என்று செல்லமாக அழைக்கப்பட்டு, நேசிக்கப்பட்ட ஒருவராகத் திகழ்ந்தார்.
அவர் ஒரு பழுத்த அனுபவசாளி. மாணவப் பருவ எண்ண ஓட்டங்களை நன்கு அறிந்து வைத்திருந்தார். எப்போதும், மாணவர்கள் சார்பாகவே நிர்வாகத்திடம் வாதிடுவார். மாணவர்

சார்பாகவே செயல்படுவார். அவரிடம் கற்ற மாணவர்களிடம் அவரது தன்மைகளைக் கேட்டு அறிந்து கொள்ளலாம். உளவியலாளர் போன்றே அவரது நடவடிக்கைகள் அனைத்தும் அமைந்திருக்கும்.

ஏதாவது, தவறான ஒரு விடயத்தைச் சொல்லும் போது, பொருத்தமற்ற விடயம் தொடர்பாக அவரிடம் உரையாடுகின்ற பொழுது, அவற்றைப் பொருட்படுத்தாத ஒரு வகையான மமதையும் அவரிடம் இருந்ததை நான் அவதானித்திருக்கிறேன். அது ஓர் அறிவு மமதை. அனுபவ மமதை என்று கூட அதைச் சொல்லலாம். நாம் ஒரு பொருத்தமற்ற விடயத்தை சொல்கின்ற பொழுது அதை தட்டிக் குட்டின மாதிரி பேசுவார்.

''நான் அவருடன் பல பயணங்களை மேற்கொண்டுள்ளேன். ஸலபிய்யாவின் விடுமுறையில் எங்களை ஊருக்கு அழைத்துச் செல்வார். அப்போது, வழியில் மாணவர்களை நல்ல உணவகங்களுக்கு அழைத்துச் சென்று, அவர்கள் விரும்பும் உணவு வகைகளை வாங்கிக் கொடுப்பார். எனினும், அவரிடம் ஹோட்டலில் சாப்பிடும் பழக்கம் இருக்கவில்லை. பறகஹதெனியவிலிருந்து மருதமுனை செல்லுகின்ற வரையும் அவர் எந்த ஹோட்டலிலும் சாப்பிட மாட்டார். பசி வந்தால் அவர் இளநீரை மாத்திரம் வாங்கிக் குடிப்பார். ஆனால் நல்ல ஹோட்டல்களில் மாணவர்களுக்கு சாப்பாடு வாங்கிக் கொடுப்பார்.

புதிதாக கலாபீடத்திற்கு வந்த மாணவர் யாருக்காவது வீட்டுக் கவலை வந்தால், அம்மாணவனுக்கு பணம் கொடுத்து, கவலையைப் போக்குவதற்கு வழி ஏற்படுத்துவார். கடைக்குச் சென்று, ஏதாவது சாப்பிட்டு விட்டு வா என்று சொல்லி அனுப்பி வைப்பார். இதற்காக அவரது சொந்தப் பணத்தையே அவர் செலவிட்டார்.

விடுமுறையில் வீடு சென்ற மாணவர்கள் தாமதமாக விடுதிக்கு வந்தால், அவர்களை நிர்வாகம் உள்வாங்காமல் வெளியே போட்டு விடும். இதன்போது, மாணவன் விடுதிக்குள் நுழைய முடியாமல் தடுக்கப்படுவான். அதன்போது, அவனுக்கு சாப்பிடுவதற்காக பண உதவி செய்வார். அம்மாணவன் மிகவும் கவலையோடு இருப்பான். அந்த மாணவனுக்கு ஆறுதல் வழங்கி, நிர்வாகத்திடம் அவனுக்காகப் பரிந்து பேசி, அந்த மாணவனை மீண்டும் கலாபீடத்தில் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்.

புதிதாக வந்த மாணவர்கள் வீட்டுக் கவலையில் இருக்கின்ற பொழுது வாசிப்பு பழக்கத்தை அவர் ஊட்டி கவலையை மறக்கச் செய்வார். சுவாரஸ்யமான நாவல்களை வழங்கி, முதலில் வாசிப்பு ஆர்வத்தை ஏற்படுத்திவிடுவார். அதன்பின்னர் இஸ்லாமிய நூல்களை வாசிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குவார்'' என முபாரக் மதனி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

பிக்ஹ் – சட்டக்கலை, சீறா – வரலாறு போன்ற பாடங்களை அவரிடம் கற்றுள்ளேன். ஹதீஸ் பாடத்தையும் விரும்பிக் கற்பிப்பார். வயதான காலத்திலும் கரும் பலகையில் வளையாமல் அழகாகவும் நேராகவும், நேர்த்தியாகவும் எழுதுவார். அவர் எனக்கு எழுதிய கடிதங்களையும் அவரது சில பெறுமதியான ஆக்கங்களின் கையெழுத்துப் பிரதிகளையும் இன்றுவரை பாதுகாத்துவருகின்றேன்.

இன்று பல்துறைப் பதவியில், ஸலபிய்யாவில் கற்றவர்கள் அமர்வதற்கு அரும் பணியாற்றிய ஒருவர், அஷ்ஷைக் பாசில் எஸ்.எம்.முஸ்தபா மவ்லானா ஜமாலி அவர்கள். இவரது காலத்தில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய பறகஹதெனிய ரபீக் ஆசிரியர் அவரும் ஸலபிய்யாவின் நவீன கல்வியில் முக்கிய பங்களிப்பை செலுத்தியுள்ளார்.

முஸ்தபா மவ்லானா அவர்கள் நூல்களை வாசிக்க ஆர்வப்படுத்தியது போன்று எழுத்தாற்றலையும் வளர்த்துவிட்டார். அவரால் பலர் உருவாக்கப்பட்டுள்ளார்கள். அவரின் மாணவர்களில் ஒருவரான இம்தியாஸ் ஸலபி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“உஸ்தாத் முஸ்தபா மவ்லானா அவர்களை முதலில் நான் சந்தித்தது அஸ்ஸலபியாவில் தான். மவ்லானா ஹஸ்ரதும் மீரான் மவ்லவி அவர்களும் தான் எனக்கு நேர்முக பரீட்சை நடாத்தினார்கள். மெல்லிய சுபாவமும் இதமான குணமும் சிரித்த முகமும் மவ்லானா ஹஸ்ரதின் பண்பாக இருந்தது.

மாணவர்களை தட்டிக் கொடுப்பதற்காக “அறுபது வயதிலும் மவ்லானா எப்படி சுறுசுறுப்பாக இருக்கிறார் பார்” என்று மீரான் மவ்லவி குறிப்பிடுவார்.

எனது எழுத்துத்துறை பங்களிப்பிற்கு மவ்லானா ஹஸ்ரத் அவர்கள் காரணமாக இருந்தார்கள். ஸலபியாவில் இரண்டாம் ஆண்டு படிக்கும் போது உண்மை உதயத்திற்கு கட்டுரை எழுதத் துவங்கினேன்.எழுத்துப் பிழைகளை என் வகுப்பு நண்பர் ஜப்பார் சரிசெய்து தருவார். எனது முதலாவது கட்டுறையை மவ்லானா ஹஸ்ரதிடம் கொடுத்ததும் நல்லா இருக்குது பிரசுரிக்கலாம் எனக் கூறினார். அல்லாஹ்வின் உதவியால் இன்று வரை எழுத்துப் பணியில் உள்ளேன் பல நூல்களையும் எழுதியுள்ளேன்.

மவ்லானா ஹஸ்ரத் இந்தியாவுக்கு படிக்கச் சென்ற பயணத்தையும் படிப்பதற்கு பட்ட சிரமத்தையும் சொல்லி எமது வகுப்பு மாணவர்களை உற்சாகப்படுத்துவார்கள்”

நூல்களை எப்படிப் படிக்க வேண்டும் என்று பக்குவமாக எங்களை ஆர்வப்படுத்தினார் என்பதை, எனக்கு அவரோடு உள்ள ஓர் அனுபவத்தை இங்குப் பதிய ஆசைப்படுகின்றேன்.

எனது எழுத்தாற்றலில் இவரின் பங்கு மிகமுக்கியமானது. இவர் இந்தியாவில் கற்கும் காலத்தில் இவர் இலங்கைக்குச் சுமந்து வந்த முக்கிய நூல்களில் ஒன்று எரிமலை. இந்த அரிய நூல் பிரித்தானிய அரசால் தடைசெய்யப்பட்டது. இந்தியச் சுதந்திரப் புரட்சியாளர்களை அடையாளப்படுத்தி, புதிய புரட்சி செயற்பாட்டாளர்களை விதைக்கும் தன்மைகொண்ட விறுவிறுப்பான நூல் அது.

இந்த அரிய நூலைப் பற்றி ஒரு தடவை வகுப்பில் குறிப்பிட்டார். அதை வாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் மேலிட்டது. இரவல் பெற முனைந்தேன். தரமறுத்தார். பல தடவைகள் கேட்டேன். தரவே இல்லை.

நான் ஸலபிய்யாவில் 3ம் ஆண்டு படிக்கும் போது, ஒருநாள் என்னை அழைத்து, 5 ரூபாய் முத்திரை வாங்கிக் கொண்டு எனது அறைக்கு வா என்றார். வாங்கி கொண்டு சென்ற போது, இரண்டு வாரத்தில் இந்த நூலை வாசித்துவிட்டு, எந்த சேதமும் இன்றி திருப்பி ஒப்படைப்பேன் என்று கடிதம் எழுதி, முத்திரைக்கு மேல் கையொப்பமிட்டுத்தருமாறு கேட்டார். அவ்வாறு எழுதிக் கொடுத்தேன். நூலைத் தந்தார். அது மிகவும் பழைமையான, தாள்கள் மஞ்சள் நிறத்தில் காணப்பட்டது. அதைப் பாதுகாப்பதும் சேதமின்றி வாசிப்பதும் மிகவும் சவாலானது. எனினும், இரண்டு வாரங்களில் அதை நேசித்துப் பாதுகாத்து, வாசித்து, குறிப்பு எடுத்து கொண்டு, அவர் தந்ததுபோல் திரும்ப ஒப்படைத்தேன். வகுப்பில் வந்து அந்த நூலில் உள்ள சில விடயங்கள் பற்றி கேள்விகள் கேட்டார். பதில் சொன்னேன்.

அந்த நூல் காலனித்துவ பிரித்தானியாவுக்கு எதிரான இந்திய சுதந்திரப் போராட்டம் தொடர்பானது. அதில் ஒரு பகுதி இந்திய முஸ்லிம்களின் சுதந்திரத்திற்கான பெரும் பங்களிப்பைப் பற்றி மிகத் தெளிவாக பேசுகிறது. அந்தக் குறிப்புக்கள் சில, எனது பங்களிப்பால் உணர்வு வார இதழில் தொடர்ந்து வெளிவந்தது.

ஒரு நூலின் பெறுமானம், அந்த நூலை அவர் பாதுகாத்த விதம், நூல்களை இரவல் கொடுத்த பாங்கு, வாசித்துப் பெற்ற பயனை அவர் பரிசீலித்துப் பார்த்த பரீட்சை முறைமை அனைத்தும் எனக்கு இன்று வரை நூலின் மேல் பெருங் காதலை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

*இரவல் பெற்ற முதல் நூலை நான் ஒப்படைத்த விதம் அவருக்கு என்மீது அன்பை அதிகரித்தது. எனக்கு அவர் மீது அன்பையும் வாசிப்பில் ஆர்வத்தையும் அதிகரித்தது. அடுத்து எனக்கு மறுமலர்ச்சி ஆசிரியர், நாவலர் யூஸுப் அவர்கள் எழுதிய உமர் முக்தர் என்ற நாவலை அதே இரவல் முறையில் தந்தார். அதையும் அவ்வாறு இரண்டு வாரங்களில் வாசித்துவிட்டு, திரும்ப ஒப்படைத்தேன். அதன் பின்னர் நான் மதுரசா கல்வியைப் பூரணப்படுத்திய பின்னரும் பெறுமதியான நாவல்கள் சிலதை தந்து வாசிக்கத் தூண்டினார். அதற்காக முக்கிய பல நூல்களை மருத முனையிலிருந்து பறகஹதெனியவிற்கு சுமந்து வந்து தந்தார்.*

*தோப்பில் முகம்மது மீரானின் இஸ்லாமிய விரோதப் போக்கு நாவல்களைக் கண்டித்து எழுதுமாறும் விமர்சிக்குமாறும் எனக்குக் கடிதங்கள் எழுதினார். அவரது அந்த வேண்டுகோளில் தான் ''இஸ்லாமியப் பார்வைக்குள் படைப்பிலக்கியம்'' என்ற எனது கட்டுரை இந்திய – இலங்கைப் பத்திரிகைகளில் வெளிவந்தது.*

*அவர் இறையடி சேரும் வரை எனது எழுத்தாற்றலில் மிக அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்தினார். ''எழுதிப் பழகிய கை பேனாவைக் கைவிடுவதில்லை'' என்று அடிக்கடி சொல்லும் அவர், தனது மரணம் வரை நூல்கள் கொள்வனவு செய்து கற்பதிலும் எழுதுவதிலும் அவர் ஈடுபட்டார்.*

*நான் திருமணமான பின்னர், ஒரு தடவை எனது வீட்டிற்கு வந்தார். எனது புத்தகக் கபட்டில் ஒரு புதிய அரபுப் புத்தகத்தைக் கண்டார். அதில் பெற்றோருக்காக அவர்கள் தவறவிட்ட(கழாத்)தொழுகைகளைப் பிள்ளைகள் தொழலாமா? என்ற மஸ்அலா விவாதிக்கப்பட்டிருந்தது. இது புதிய விடயமாக உள்ளது. இதை நான் வாசிக்க வேண்டும் என்று நூலை எடுத்துச் சென்றார். வயது முதிர்ந்த காலத்திலும் மஸாயில்களை ஆராய்வதில் ஆர்வமாக இருந்தார். நான் சவுதியிலிருந்த பொழுது, ஒரு தடவை என்னிடம் முக்கிய சில கிதாபுகளை வாங்கி அனுப்புமாறு வேண்டினார். அவற்றை நான் வாங்கி அனுப்ப முன்னர் எனது ஆசான் இறையடி சேர்ந்துவிட்டார்கள். நான் வெளிநாட்டில் இருந்ததால், என்னால் அவரது ஜனாஸாவில் கூட கலந்து கொள்ளமுடியவில்லை.*

*நூல்களின் மீது அளப்பரிய காதல் கொண்டிருந்தார். ஒரு நூலை வாசிக்க வேண்டும் என்று அவாக் கொண்டால், 50 ரூபாய் பெருமதியான அப்புத்தகத்தை நூறு ரூபாய் செலவு செய்தாவது, தேடிச் சென்று வாங்குகின்ற அவரது புத்தகப் பிரியம் ஆச்சரியமானது.*

*நான் ஸலபிய்யாவின் நான்காம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதிய பின்னர், 1995களில் தென்னிந்தியாவில், நாகர்கோவிலில் அமைந்துள்ள ஜமியத்துல் பிர்தவ்ஸிய்யாவில் கல்வியைத் தொடர ஏற்பாடுகளைச் செய்தேன். தாருத் தவ்ஹீத் நிருவாகம் நான் அங்கு செல்வதை விரும்பவில்லை. மவ்லான அவர்கள் ஸலபிய்யாவின் உப அதிபராக இருந்தார். இதை மவ்லான அவர்களிடம் முறையிட்டேன். படிக்கத்தானே செல்கின்றாய்.*
*அங்கு கல்வியை மேற்கொள்வதற்காக பரிந்துரைக் கடிதத்தையும் நற்சான்றிதழையும் நான் தருகின்றேன் என்று தந்து உதவினார். தென்னிந்தியாவுக்கு சென்று கற்பதற்கான விசா கிடைக்கவில்லை. ஸலபிய்யா மீண்டும் என்னை இணைத்துக்கொண்டது.*

*அவர் எனக்கு எழுதிய கடிதங்கள் சிலவற்றை மட்டுமே என்னால் பாதுகாக்க முடிந்தது. நான் மாணவனாக இருக்கின்ற பொழுது அவர் ஸலபிய்யாவிலிருந்து விடைபெற்றுச் சென்று விட்டார். என்னுடைய எழுத்துத் துறை ஆர்வத்தைப் பார்த்து எனக்கு கடிதம் எழுதுகிற பொழுது கூட அன்புள்ள எழுத்தாளர் என்றுதான் என்னை விழித்து எழுதுவார். அதேபோன்று எப்படி எழுத வேண்டும், எதை எழுத வேண்டும் என்றெல்லாம் எனக்குக் கற்றுத் தந்தார். இஸ்லாமியப் பார்வைக்குள் படைப்பிலக்கியம் என்று ஒரு கட்டுரை எழுதுவதற்கு அவர்தான் என்னைத் தூண்டினார். தோப்பில் முஹம்மது மீரான் தொடர்பான ஒரு அறிமுகம் கூட எனக்கு அவர் மூலமாகத்தான் கிடைத்தது.*


*26-01-2006களில் அவர் எனக்கு எழுதிய கடிதம்.*

*"பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.*

*அல்லாஹ் போதுமானவன்*

*அன்புக்கும் பண்புக்கும் மதிப்பிற்கும் உரிய எழுத்தாளர், மாணவர் ஹபீழ் அவர்கட்கு,*

*அஸ்ஸலாமு அலைக்கும்*



Moulavi Fazil
S. M. Musthafa Moulana
"KALAPAVANAM"
MARUTHAMUNAI - 3
KALMUNAI 26.01.2006

Moulavi Fazil
S. M. Musthafa Moulana
"KALAPAVANAM"
MARUTHAMUNAI - 1,
KALMUNAI.............19...

*நீங்கள் பிறப்பதற்கு முன்னாலே அல்லது, தாயின் மடியில் சிறுநீர் கழித்துத் தொல்லையளித்த காலத்திற்கு முன்போ நான் 1975ஆம் ஆண்டு இப்போது தவ்ஹீத் ஜமாஅத் மக்களை நல்லடக்கம் செய்து கொண்டிருக்கும் பள்ளிவாசலில் குத்பா ஓதிய குத்பா எழுதிய கொப்பியும் (அதில் இமாம் புகாரி(ரஹ்) அவர்களின் ஆசான்கள் பற்றிய குறிப்புகளும் இருக்கின்றன) பத்து வருடங்களுக்கு முன் பறகஹதெனியாவில் இருக்கும் போது இந்தியா "அல் முபீன்" பத்திரிகைக்கு (மாசிகைக்கு) எழுதிய "குர்ஆன் ஷரீப் விரிவுரைகளும் தவறுகளும்" என்ற கட்டுரைகளின் ஒரு தொகுப்பு வெளிவந்ததை அறிந்திருப்பீர்கள்.*

*அதன் மறுபகுதி என்னிடமுள்ளது. ஸனப் (ரழி) அவர்களின் தொடைகளைக் கண்டுதான் நபியவர்கள் அவரை விவாகம் செய்ய முனைந்தார்கள் என இமாம்கள் எழுதியுள்ளனர். இப்பகுதியை மட்டுமோ, அல்லது இரண்டையும் சேர்த்து ஒன்றாக நீங்கள் முயற்சி செய்யலாம்.*

*மேலும் "தௌஹீத்" ஜமாஅத்தின் கொள்கைகள் பற்றிய அறிக்கைகள் உள்ள கொப்பியையும் அனுப்பியுள்ளேன். விரும்பியபடி செய்யுங்கள்.*

*இப்பொழுதுள்ள உலமாக்கள் ஒரு துண்டில் குறிப்புக்களை மட்டும் எடுத்துக்கொண்டு மிம்பரில் ஏறிக்கொண்டு உளருவார்கள்.*

*நான் 20 நிமிடம் பேச கூடியதாக எழுதிக்கொண்டு மிம்பரில் நின்று வாசிப்பேன். இது என் வழக்கம். அத்தகைய பிரசங்கங்கள் கொப்பிகள் அனேகம் உண்டு. சிலவற்றை எரித்துவிட்டேன். அதில் ஒன்றையும் அனுப்பவில்லை. தேவையானால் எழுதுங்கள். அல்லது போனில் பேசுங்கள். இன்னும் ஏதோ அனுப்பியுள்ளேன்.*

*பிறபின்*

*வஸ்ஸலாம்*

*நீங்கள் அனுப்பிய கல்வியே செல்வம் 12 புத்தகங்கள் கிடைத்தன.*

*நன்றி"*

*2004ம் ஆண்டு, டிசம்பர் மாதம் சுனாமி தாக்கிய போது, நான் நிவாரணப் பணிக்காக மருத மனை சென்ற வேளை, அவரது கலாப வனத்தில் வைத்து அவரை சந்தித்து நீண்ட நேரம் உரையாடினேன். அத்தோடு, அவருடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டேன். என்னுடைய ஆக்கத்திறனிலும் என்னுடைய கல்வி வாழ்விலும் மிகப்பெரிய ஒரு பங்களிப்பை அவர் செய்திருக்கிறார் என்ற நன்றியுணர்வு எனக்கு என்றும் உண்டு.*

### குத்பா உரைகள்

*எழுத்தாளராக இருந்த அவர் சிறந்த சொற்பொழிவாளராகவும் காணப்பட்டார். அப்போது, ஏகத்துவ எழுச்சி ஏற்பட்டிருந்த ஊர்களான பரகஹதெனிய, கல்முனை போன்ற ஊர்களில் உள்ள பள்ளிவாசல்களில் அவரது ஜூம்ஆ உரைகளை ஆற்றி இருக்கிறார். அவை, நீண்ட நேரம் கொண்டதாக இருக்காது. ஜூம்ஆ உரைகளைத் தொகுத்து, எழுதி, வாசிப்பார். அவ்வுரைகளை சுருக்கமாகவும் சுவாரஸ்யமாகவும் அமைத்திருப்பார் என அவரது உரையை செவிமடுத்தவர்கள் குறிப்பிடுகின்றனர்.*
*"மவ்லானா ஹஸ்ரத் அவர்கள் குத்பா ஓதும் போது எழுதித் தான் வாசிப்பார்கள். அவர்கள் ஆற்றிய ஒரு குத்பா உரை எனக்கு விருப்பமானதாக இருந்ததால், அந்த குத்பாவை எழுதிக் கொள்ள தருமாறு கேட்டேன்.அந்த குத்பா புத்தகத்தை தந்த போது முழு குத்பாவையும் எழுதிவிட்டு தருகிறேன் என்றேன். பரவாயில்லை எழுதிக் கொள் என்றார்கள்" என இம்தியாஸ் ஸலபி குறிப்பிடுகின்றார்.*

*அவரது ஜூம்ஆ உரைகள் தொடர்பாக அவர் எனக்கு 2006களில் எழுதிய ஒரு மடலிலும் குறிப்பிட்டிருக்கிறார். அவரது ஜூம்ஆ உரைகள் அடங்கிய ஒரு குறிப்புப் புத்தகத்தையும் என்னிடம் தந்தார். அதேபோன்று முபாரக் மதனி அவர்களிடமும் சில குறிப்புப் புத்தகங்கள் இருக்கின்றன என அவர் என்னிடம் குறிப்பிட்டார். அழகிய, எளிய, இலகு தமிழில் பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் அவரது குத்பாவை அமைத்திருப்பார் என முபாரக் மதனி அவர்கள் குறிப்பிடுகின்றார்.*

### ஆன்மிக செயற்பாடுகள்

*இஸ்லாமி அங்கீகாரத்திற்குற்பட்ட வகையில் நவீனத்துவத்தை அங்கீகரித்த அவர், மரபு சார்ந்த ஆளுமையாகவே வாழ்ந்தார். பாரம்பரிய இஸ்லாமிய ஆளுமைகளிடம் காணப்பட்ட ஆன்மிக செழுமையும் பக்குவமும் படாடோபமற்ற எளிமையும் அவரிடமும் காணப்பட்டது.*

*வெள்ளிக்கிழமை துஆக்கள் அங்கீகரிக்கப்படும் சொற்ப நேரம் உண்டு என்பதால், அந்நாளில் அதிக ஆன்மிகச் செயற்பாடுகளில் ஈடுபடுவார். அமல்களில் அதிக ஆர்வம் காட்டுவார். தொழுகையில் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருந்தார். தஹஜ்ஜூத் கூட தவறவிடமாட்டார். பள்ளியைப் பெருக்கி, துப்பரவு பண்ணிய ஒரு பெண்மணிக்காக, நபி (ஸல்) அவர்கள் பிரத்தியேகப் பிரார்த்தனை செய்தார்கள்.*

*நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது காலத்தில் மதீனாவைச் சேர்ந்த ஒரு கறுப்பின பெண் அவ்வப்போது மஸ்ஜிதுந் நபவியை கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டுட்டு வந்தாள். அந்தப் பெண்ணுடைய பெயர் உம்மு மிஹ்ஜன். ஒரு நாள் நபியவர்கள் அந்தப் பெண்ணைக் காணாததனால் அவரைப் பற்றி விசாரித்தார்கள். "மஸ்ஜிதுன் நபவியை கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்கின்ற அந்தப் பெண்ணைக் காணவில்லையே?" என ஸஹாபாக்களிடம் வினவியபோது "சில நாட்களுக்கு முன் அந்தப் பெண் மரணித்து விட்டாள்" என அவர்கள் பதிலளித்தார்கள். அந்த செய்தியைக் கேட்டு கவலையடைந்த நபிகளார் ஆத்திரப்பட்டார்கள். "ஏன் அந்தப் பெண்ணுடைய மரணச் செய்தியை என்னிடம் அறிவிக்கவில்லை?" என கடிந்து கொண்டார்கள். பின்னர் "அந்தப் பெண்ணின் கப்ரை எனக்குக் காண்பியுங்கள்" எனக் கூறிய நபியவர்கள் அந்தப் பெண்ணுக்காக விஷேடமாக ஜனாஸா*

தொழுகையை நிறைவேற்றினார்கள். அந்த சம்பவம் அவரது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்ததை அறிய முடிந்தது. தனக்கும் அந்த அந்தஸ்துக் கிடைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் யாருமில்லாத நேரம் பார்த்து பள்ளியை துப்பரவு செய்வார். அதைக் கண்டு நாம் உதவ முனைந்தால், அதை அங்கீகரிக்கமாட்டார். நன்மை வேண்டுமென்றால், வேறு நேரத்தில் செய்து கொள்ளுமாறும், தனது நற்காரியத்தில் இடையூறு செய்ய வேண்டாம் என்றும் கண்டிப்பார்.

சிலபோது பள்ளிவாசலை பெருக்கி, சுத்தம் செய்வார்கள் ஏன் ஹஸ்ரத் நீங்க செய்ரீங்க என்று கேட்டால் நான் நன்மையை சம்பாதிக்க விரும்புகிறேன் உனக்கு வேண்டுமென்றால் நீயும் பெருக்கு என்பார்கள் என அவர் பள்ளியைப் பெருக்குவதைக் கண்ட நிகழ்வை இம்தியாஸ் ஸலபி குறிப்பிடுகின்றார்.

"பள்ளியின் முதல் தளத்தில் அவரது அறை இருந்தது. தஹஜ்ஜுத் தொழுகையை தவறவிட மாட்டார். நடுநிசியில் தொழுவதற்காக, அமைதியாக எழுவார். பள்ளியில் உறங்குபவர்களுக்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல், யாருக்கும் தெரியாமல் அவர் எழுந்து, மிக இரகசியமாகவே தொழுவார். தொழுகையின் பின்னர் பிரார்த்தனை புரிவார். அவர் விழித்தெழும்போது, மின்விளக்கை ஒளிர விடமாட்டார். மற்றவர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனால் அவர்களுக்கு எந்தவிதமான தொல்லையும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் மிக அவதானமாகச் செயற்படுவார்" என முபாரக் மதனி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

### நேர முகாமைத்துவம்

அவரது வாழ்வே நேர அட்டவணையின் அடிப்படையில் இயங்கிக்கொண்டிருந்தது. அவரது உணவுப் பழக்கம் கூட ஒரு வித்தியாசமானதாக காணப்பட்டது. அதிகாலை பஜ்ர் தொழுகையின் பின்னர் சிறிது நேரம் தூங்குவார். பகல் உணவின் பின்னரும் சிறிது தூங்குவார். அஸர் தொழுகையின் பின்னர் சில பழ வகைகளைச் சாப்பிடுவார். அதனைத் தொடர்ந்து நடைபயிற்சியை மேற்கொள்வார். இதே போன்று எழுதுவது, படிப்பது, வாசிப்பது கற்பித்தலுக்கான குறிப்புகளை தயார்பண்ணுவது போன்ற பல்வேறு அம்சங்களில் இவர் தன்னுடைய நேர முகாமைத்துவத்தை கவனத்தில் கொண்டு செயல்பட்டார் என்பதை அறிய முடிகின்றது.

### பிறருக்கு உதவி

பறகஹதெனியவில் அவர் விரிவுரையாளராக கடமையாற்றிய பொழுது கடன் கேட்டு வருபவர்களுக்கு உதவியுள்ளார். தன்னிடம் கடனுதவி பெற்றவர்களின் பெயர்களை எழுதி வைத்திருப்பார். அதில் அதிகமான பெர்களும் தொகையும் இருப்பதை அவதானித்த முபாரக் மதனி அவர்கள் இவ்வளவு தொகையை கடன் வாங்கியவர்கள் உங்களுக்கு தர வேண்டி இருக்கிறதே! ஏன் இதை திருப்பி வாங்காமல் இருக்கின்றீர்கள்? என்று இவர் ஆச்சரியப்பட்டுக் கேட்ட போது, கடன் வாங்கியர்கள் திருப்பித் தராவிட்டால், நான் அவர்களிடம் அதைக் கேட்பதில்லை. ஏனெனில், இனிமேல் அவர்கள் கடன் கேட்டு வர மாட்டார்கள். அதனால், நான் அப்படியே விட்டுவிட்டேன் என்று சொல்லியிருக்கிறார்.

### இரகசிய தர்மம்

ஒரு தடவை முபாரக் மதனிடம் எனது சில அரபு நூல்களை விற்று அதைப் பணமாக்கித் தர முடியுமா? என்று கேட்டுள்ளார்,முஸ்தபா மவ்லானா அவர்கள். புத்தகத்தின் மீது அளப்பரிய அன்பு கொண்ட நீங்கள் ஏன் புத்தகத்தை விற்கச் சொல்கின்றீர்கள் என்று அவர் கேட்ட பொழுது, இது பற்றி கேள்வி கேட்க வேண்டாம். புத்தகத்தை விற்று, அவசரமாக பணமாக்கி தார உங்களால் முடியுமா? என்று திரும்பவும் கேட்டிருக்கின்றார்.

*புத்தகத்தின் மீது அளப்பரிய பாசமும் நேசமும் வைத்திருக்கின்ற இவர் ஏன் இந்த நிலைமைக்கு தள்ளப்பட்டார் என்று வலியுறுத்தி கேட்ட போதுதான், உண்மையைத் தயக்கத்துடன் சொல்லியுள்ளார். "நான் இந்த ஊரில் உள்ள சில ஏழைக் குடும்பங்களுக்கு உதவி செய்து வந்தேன். அவர்கள் என்னுடைய உதவியினால் தங்களுடைய வாழ்க்கைச் செலவை நிவர்த்தி செய்து வந்தார்கள். இந்த மாதம் என்னால் அவர்களுக்கு உதவி செய்ய முடியவில்லை. எனவே, என்னுடைய சில புத்தகங்களை விற்று அதனுடைய பணத்தை எனக்கு தாருங்கள். அவர்களுக்கு நான் அதன் மூலமாக உதவி செய்யப் போகிறேன் என்று கூறியுள்ளார்.*

*ஏழைக் குடும்பங்களுக்கு தொடர்ந்து உதவி செய்து வந்திருக்கின்றார். ஒரு கட்டத்தில் அவருக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது யாரிடமும் உதவி பெறாமல், தன்னுடைய பொருளாதாரத்தின் மூலமாகத்தான் இந்த உதவியைச் செய்யவேண்டும் என்று அந்த மனிதர் தன்னுடைய அந்திம நேரத்தில் கூட நினைத்திருக்கிறார் என்பதை முபாரக் மதனி அவர்கள் என்னோடு பகிர்ந்து கொண்ட பொழுது என் கண்கள் பனித்துவிட்டன. அந்த அளவு தர்மத்தை மிக இரகசியமாகச் செய்து வந்திருக்கின்றார். தர்மத்தை மிகப்பெரிய அமலாகக் கருதி அதை தொடர்ந்து நிறைவேற்றி வந்து இருக்கின்றார் என்பதுதான் இங்கு நாங்கள் அவரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு முன்னுதாரணமாக உள்ளது.*

*கை நிறைய சம்பளம் பெறும் பலர், கடனாகக் கூட உதவி செய்யாத தேக்கு மனங்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு மத்தியில் இந்த மனிதர் இப்படி எல்லாம் செய்திருக்கிறார் என்பதுதான் அவர் மீது எங்களுடைய பாசத்தை அதிகரிக்கச் செய்கிறது. அவருக்காக அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும் என்ற உந்துதலை எங்களுக்குத் தந்து, எங்கள் கரங்கள் அவருக்கான பிரார்த்தனைக்காக உயர்கின்றன.*

## அல்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு

*மிக நீண்ட காலம் அறிவுத் துறையில் ஆழமான பங்களிப்பை வழங்கி பலரை உருவாக்கிய மவ்லான அவர்கள் மிகவும் மனநிறைவான பணியாக தனது வாழ்க்கைக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்.*

*இவற்றையெல்லாம் விட எனக்கு மனநிறைவு தருவது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வேதம் அல்குர்ஆனை தமிழில் மொழிபெயர்த்து, துபாய் அரசாங்கப் பிரசாரகர் "இக்பால் மதனீ" அவர்கள் இலங்கைக்குச் சரிகாண எடுத்துவந்தபோது, நானும் அதில் பங்கெடுத்து இரண்டு கிழமை இரவு பகலாகச் சரிபார்த்துக் கொடுத்ததாகும்.*

*இம்மொழிபெயர்ப்பில் "இறைவன்" என்ற சொல்லை நீக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தேன். "இறைவன்" என்றால் "எங்குமிருப்பவன்" (தூணிலுமிருப்பான் துரும்பிலுமிருப்பான்) என்ற அத்வைதக் கோட்பாட்டுக் கருத்தை குர்ஆன் மொழிபெயர்ப்பில் போடவிடமாட்டேன் என்றேன். தமிழ் அகராதியையும் காண்பித்தேன்.*

*அன்புள்ள "இக்பால் மதனீ" அவர்கள் இந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டார். "இறைவன்" என்று இருந்த இடங்களிலெல்லாம் "இரட்சகன்" என மாற்றியமைத்தோம். சவூதி மன்னர் "பஹ்து" அவர்களின் சொந்தச் செலவில் பல இலட்சம் பிரதிகள் அச்சிட்டு இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வசிக்கும் தமிழ் முஸ்லிம்களுக்கு இலவசமாக விநியோகிக்கச் செய்தார்.*

*இவ்வேலை 1993ல் நடைபெற்றது. இரண்டு கிழமை வேலைக்கு எனக்குக் கிடைத்த ஊதியம் 1000 ரியால்களாகும். போக்குவரத்து, உணவு, பேனா செலவுகள் இக்பால் மதனீயைப் பொறுத்தது. அல்லாஹ் அன்னாரின் பிழைகளைப் பொறுத்தருள்வானாக! இலங்கையில் எல்லாப் பள்ளிவாசல்களிலும் இந்த மொழிபெயர்ப்பு இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறது."*

இந்த மொழிபெயர்ப்பில் சில தவறுகள் இடம்பெற்றுள்ளதை அவரது கவனத்திற்கு நான் கொண்டு சென்றபோது, அதை ஏற்றுக் கொண்டார்.

எந்த ஆர்ப்பாட்டமும் ஆர்பரிப்புமின்றி அமைதியாக அறிவுப் பணியாற்றிய மவ்லானா அவர்கள் 12- 02- 2008ல் வபாத்தானார்கள்.

அறிவுத் தாகமும் ஆன்மிக செழுமையும் நிறைந்த முஸ்தபா மவ்லானா அவர்களது மகத்தான நற்பணிகளைப் பொருந்திக் கொண்டு, நிறைவான நற்கூலியை வழங்க வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றேன்.